1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இரண்டு இசைக் கல்லூரிகளையும் எடுத்துக் கொண்டால் சென்னையில் 808 மாணவ மாணவியரும், மதுரையில் 69 மாணவ மாணவியரும், ஆக மொத்தத்தில் 877 மாணவ மாணவியர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

469—(*வினா எண் 12559) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, உயர் நிலைப்பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தொலைக்காட்சி நிலையத்தின் எல்லைக்குட்பட்ட மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் உதவியால் அங்கீகரிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக்கொள்ள அரசு ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளது.

(முற்பகல் 10—50)

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு சில ஊர்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கின்ற பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களில் போதிய அளவு பொருளாதார வசதி இல்லை. ஆகவே, அந்த வசதியைப் பெற முடியாத சூழ்நிலையிலே அந்த மாணவர்கள் இருக்கிறார்கள். இதைக் கருத்திலேகொண்டு அரசு தொலைக்காட்சி பெட்டியை வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1987 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. சி பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 81 பள்ளிகளுக்கு அரசு ஏற்கெனவே தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குவதற்கு உதவியைத் தந்திருக்கிறது. சில மாவட்டங்களுக்கு இரண்டு ரூபாய் வீதம் மாணவர்களிடமிருந்து நிதியாக வசூலித்து பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் மூலமாக இந்த நடவடிக்கையை மேற் கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. எங்கெங்கு பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தினால் அது அறவே முடியவில்லையோ அங்கே அரசினுடைய உதவியைச் செய்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு சில பள்ளிகளுக்குத்தான் அரசு மூலம் வழங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், பொதுவாகக் கிராமப்புறங்களிலேயிருக்கின்ற உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளுக்கு இந்தத் தொலைக்காட்சி பெட்டிகளை வழங்குவது, அந்த மாணவர்கள் கல்வியறிவைப் பெறுவதற்கு மிகுந்த வசதியாக இருக்கும். ஏனென்றால் இன்றைய சூழ்நிலையிலே நகர்ப்புறங்களிலே இருக்கின்ற மேல் நிலைப்பள்ளிகளிலே எல்லா வசதிகளையும் பெற்று அந்த மாணவர்கள் படிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆனால், கிராமப்புறங்களிலேயிருக்கின்ற மேல்நிலைப்பள்ளிகளிலேயெல்லாம் அந்த வசதிகள் ஓரளவிற்குக் குறைவாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். அதைக் கருத்திலே கொண்டு, கிராமங்களிலேயிருக்கின்ற அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தொலைக்காட்சி பெட்டிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொலைக்காட்சி பெட்டிகளை வழங்கி விடுகின்ற காரணத்தால் மட்டும் பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்களுக்கு அதனால் பலன் கிட்டிவிடாது. காரணம், மைய அரசினுடைய பொறுப்பிலே இயங்குகின்ற அந்தத் தொலைக்காட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும் மாணவர்களுக்குத் தேவையான Need-based Education-க்கான அக்கறையை இதுகாறும் அவர்கள் செலுத்தாத நிலையிலே இருக்கிறார்கள். வானொலியைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் மாணவர்களுக்குப் பல நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். தொலைக்காட்சி நிறுவனமும் அத்தகைய நல்ல நடவடிக்கைகளை மாணவர்களுக்குப் பலன் அளிக்கக் கூடியவைகளை எடுக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. நாமும் தெரிவித்திருக்கிறோம். அப்படி மாநில அரசே பொறுப்பு ஏற்றுச் செய்ய வேண்டுமென்றால் கேசட்டுகள் நிறைய செய்ய வேண்டும். அதற்கு நிறையப் பணச் செலவு ஆகும். அதையும் அரசு ஆய்ந்து வருகிறது.

1987 ஏப்ரல் 23]

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் சார்பாக மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் தொலைக்காட்சி பெட்டிகளை வாங்குவதற்கு அவர்களுடைய நிதியிலேயிருந்து வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்கிற ஒரு செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் முடிந்து மாலையிலே மாணவர்கள் வீட்டுக்குச் சென்று விடுகிறார்கள். இந்தத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு என்றே தனியாக இந்த இந்த நேரங்களில் அது இயக்கப்படும் என்று ஒரு நேரத்தை வரையறுத்துக் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தொலைக்காட்சி அமைப்பு-மைய அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்ற தொலைக்காட்சி அமைப்பு—செயல்படுகின்ற முறையிலேயிருந்து, பள்ளி நேரங்களில் எந்தவிதமான பலனையும் மாணவர்களுக்கு அளிக்காது என்பதுதான் அரசினுடைய கருத்து, மற்ற நேரங்களாக இருந்தாலும் கூட. மாணவர்களுக்குக் கல்விக்குப் பலனைத் தரக்கூடிய அளவிற்கு வேண்டிய ப்ரொக்ராமை அவர்கள் கொண்டு வருவார்களேயானால் அப்பொழுதுதான் பலன் உள்ளதாக இருக்கும். தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தந்துவிட்டு, அந்தத் தொலைக்காட்சி மூலமாக குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு வேண்டிய படிப்பினைச் சொல்லக்கூடிய, தேவையான படிப்புகளைச் சொல்லித் தரக்கூடிய கேசட்டுகளை மாநில அரசே தயாரித்துக் கொடுப்பது குறித்து நாம் ஆய்ந்து வருகிறோம். மைய அரசு அந்த முயற்சியில் இதுகாறும் எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை.

நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியம், கோணப்பட்டி,
அருகில் பாலாற்றில் அணைக்கட்டு

470—(*வினா எண். 6907) திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், கோணப்பட்டி அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் பல வருடங்களாக ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு 1976—77-ல் 18.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டது. பொருளாதார ரீதியில் சிக்கன